பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 09 சனிக்கிழமை (25-08-2001) தொலைபேசி: 3378 ஒலி :257

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## அரசியல் நெருக்கடிக்கு முடிவுகட்ட
# பொ.ஐ.ஐ முன்னணி - ஐ.தே.கட்சி
# உயர்மட்ட குழுக்கள் இன்று சந்திப்பு

## தேசிய நல்லிணக்க அரசு அமையும் வாய்ப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இருமுனைப் பேச்சுவார்த்தைக்கு இணங்கியிருப்பதுடன், அதற்கான உயர் மட்ட அமைச்சர்கள் குழுவையும் நியமித்துள்ளார். இக் குழுவினர் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவினருடனும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) யினருடனும் இரு முனைப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசி 'கருத்தொருமித்த அரசு' நிறுவுவது தொடர்பான பேச்சுவார்த்தை இன்று காலை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தை தொடர்பான கடிதம் ஒன்றை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசின் சார்பில் ஐக்கிய தேசியக்கட்சி உயர்மட்ட குழுவுடன் பேசுவதற்கு விவசாய அமைச்சர் டி. எம் ஜெயரத்தினா தலைமையில் அமைச்சர்கள் அனுருத்தரத்வத்த, மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமர

→ 8ஆம் பக்கம் பார்க்க

## களுத்துறை பூசா கைதிகள் உண்ணாவிரதத்தில் குதிப்பு

(கொழும்பு)

களுத்துறை மற்றும் பூசா தடுப்புமுகாங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்ட அரசியல் கைதிகள் 12பேர் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை சிறைச்சாலை அதிகாரிகள் வழங்காமையை கண்டித்தே மேற்படி அரசியல்கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் எட்டுகைதிகளும் பூசா சிறையில் நான்கு கைதிகளுமாக மொத்தம் 12கைதிகள் தமக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் கிடைப்பதை உறுதிசெய்யுமாறும் சிறைச்சாலையில் நிலவு குறைபாடுகளை நிவர்த்திக்குமாறும் கோரி உண்ணாவிரதப் போாராட்டத்ல் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## இரு கடற் கரும்புலிகள் உயிரிழப்பு

(வவுனியா)

முல்லைத்தீவில் கடந்த 4ந் திகதி இடம்பெற்ற படகு விபத்தொன்றில்.

கடற்கரும்புலி கப்டன் ராகுலன், ஞானத்பண்டா கிருஷ்ணகுமார் பரந்தன்.

கடற்கரும்புலி கப்டன் கரிகாலன்.

பூலோகசிங்கம் புஸ்பகாந்தன் முள்ளியவளை.

## சபாநாயகர் அநுராவை ரணில் சந்தித்துப் பேசுவார்

[கொழும்பு]

தனிப்பட்ட விஜயமாக அமெரிக்காவுக்குச் சென்ற சபாநாயகர் அநுராபண்டாரநாயக்கா நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

நாடு திரும்பியுள்ள சபாநாயகரை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் நிலை குறித்து அவுஸ்ரேலிய தூதுவர் ஜே. வி. பி. யுடன் பேச்சு

[கொழும்பு]

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து அவுஸ்ரேலிய உதவி உயர்ஸ்தானிகர் திருமதி கெவிக் ஹல்னு ஜே. வி. பி. யினரை அழைத்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரின் வேண்டுகோளுக்கு அமைய நேற்றுக் காலை 9மணிக்கு ஜே. வி. பி யினருடன் இச் சந்திப்பு இடம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கடவுச் சீட்டைபெற மேலதிக கட்டணம் இல்லை
### பொறுப்பதிகாரி தகவல்

[கொழும்பு]

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு கடவுச் ... யகல்வு கட்டுபாட்டாளர் நந்த சேனாபம் பலவானகே தெரிவித்துள்ளார்.

## உண்ணாவிரதத்தில் குதிப்பு

(கொழும்பு)

களுத்துறை மற்றும் பூசா தடுப்புமுகாங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்ட அரசியல் கைதிகள் 12பேர் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை சிறைச்சாலை அதிகாரிகள் வழங்காமையை கண்டித்தே மேற்படி அரசியல்கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் எட்டுகைதிகளும் பூசா சிறையில் நான்கு கைதிகளுமாக மொத்தம்12கைதிகள் தமக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் கிடைப்பதை உறுதிசெய்யுமாறும் சிறைச்சாலையில் நிலவு குறைபாடுகளை நிவர்த்திக்குமாறும் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## கொக்குத்தொருவாயில் களப்பலியான புலிகளின் விபரம்

(வவுனியா)

கொக்குத் தொடுவாய் இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டோர் விபரம் வருமாறு;

● மேஜர் நாயகன் (பேரம்பலம் யோகேஸ்வரன் யாழ். மாவட்டம்)

● மேஜர் பாண்டிமுத்து (பாலசுந்தரம்பிரதீபன் [யாழ் மாவட்டம்)

● 2ம் லெப் இளங்கீரன் (முருகன் நாகதேவன் மன்னார்.]

● 2ம்லெப் மாயவன்செல்வராசா நந்தகுமார் [கிளிநொச்சி)

தமிழீழ தேசிய துணைப் படை வீரர்களான லெப்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஜனார்த்தனை பொலிஸார் விசாரித்தனர்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு கொழும்புக்கு வந்திருந்த உலகத்தமிழர் [illegible] தலைவர் கலாநிதி இரா ஜனார்த்தனன் மற்றும் அவருடன் வந்த மூன்று பேரை கொழும்பு கோட்டைப்பொலிசார் நேற்றுக் காலை கைது செய்து. சில மணிநேர தீவிர விசாரணைக்கு பின்னர் விடுதலை செய்தனர்.

பொலிஸ் அனுமதியின்றி கொழும்பு கோட்டைப் பகுதியை புகைப்படம் எடுத்தமைக்காகவே மேற்படி நபர்களை தாம் கைது செய்ததாகக் கோட்டைப்பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ)

## கரும்புலிகள் உயிரிழப்பு

(வவுனியா)

முல்லைத்தீவில் கடந்த 4ந் திகதி இடம்பெற்ற படகு விபத்தொன்றில்,

கடற்கரும்புலி கப்டன் ராகுலன், ஞானத்பண்டா கிருஷ்ணகுமார் பரந்தன்.

கடற்கரும்புலி கப்டன் கரிகாலன்.

பூலோகசிங்கம் புஸ்பகாந்தன் முள்ளியவளை.

ஆகிய இரு கடற் கரும்புலிகள் உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (வ)

அவுஸ்ரேலிய உதவி உயர்ஸ்தானிகர் திருமதி கெவிக் ஹல்னு ஜே. வி. பி. யினரை அழைத்துப் பேச்சு நடத்தி

அமைய நேற்றுக் காலை 9மணிக்கு ஜே. வி. பி யினருடன் இச் சந்திப்பு இடம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கடவுச் சீட்டைபெற மேலதிக கட்டணம் இல்லை

### பொறுப்பதிகாரி தகவல்

[கொழும்பு]

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு கடவுச்சீட்டுபெற விண்ணப்பிப்பவர்கள் மேலதிக கட்டணங்கள் எதையும் செலுத்தத்தேவையில்லை என்று குடிவரவு,குடியகல்வு கட்டுபாட்டாளர்நந்த சேனாயம் பலவானகே தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் முறை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள

→ 8ஆம் பக்கம் பார்க்க

# இராணுவ ரீதியிலான தீர்வை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது

## ஆயர் ஜெபநேசனிடம் இந்தியத்தூதுவர்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வை இந்தியா ஒருபோதும் விரும்பியதும் இல்லை, அதனை ஆதரித்ததும் இல்லை.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் கிருஷ்ணகாந்தி தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய திருச்சபை பேராயர் வண கலாநிதி எஸ். ஜெபநேசன் அண்மையில் இந்தியத் தூதரை அவரது இல்லத்தில் சந்தித்து பேசிய போதே தூதுவர் காந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

அவர் மேலும் தெரிவிக்கையில்;இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்காக இந்தியா தனது முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இராணுவ ரீதியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மூவரும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரை பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட மூவரும் அன்றைய தினம் இரவு 7மணிக்கு யாழ். பொலிசாரினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## கொழும்பு செல்லும் யாழ் ஆயர் வன்னிக்கும் செல்வார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெறவுள்ள ஆயர்கள்பேரவை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ்ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் இன்று கொழும்புபயணமாகவுள்ளார்.

கொழும்புசெல்லும் யாழ் ஆயர் வன்னிசென்று அங்கு சமய வைபவங்களிலும் கலந்துகொள்வாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை சேகரிப்பவர் எம்மிடம் கொண்டுவந்து தந்தால் நல்ல விலைதந்து பெற்றுக்கொள்வோம். மல்ரி ஒயில், கே. கே. எஸ். வீதி, இணுவில்.
(இ-2373)

## கண்ணி வெடிகள் மீட்பு

[கொழும்பு]

கண்ணி வெடிகள், நிலக் கண்ணிகள் உட்பட வெடி பொருள்கள் பல அரியாலையில் கைப்பற்றப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

படையினரைத்தாக்குவதற்கென்றே இவ்வெடி பொருள்கள் வைக்கப்பட்டதாக படையினர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வெடி பொருள்கள் படையினரின் பொறியியல் பிரிவினால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் 'தமிழ்சினிமாவில்பெருந்திணை இலக்கிய ஆளுமைப் பண்புகளுடன் சிவாஜிகணேசன்' என்ற தலைப்பின் கீழ் பாரதிராஜாவின்' முதல் மரியாதை' எனும் திரைப்படம் இன்று முப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர்தெரிவித்துள்ளார். [உ]

## வீதி பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சந்தை வீதியில் இருந்து தெற்குப் பக்கமாகச் செல்லும் வீதியை வலிகிழக்குப்பிரதேச சபை பொறுப்பேற்றுள்ளது.

வீதியைப் பிரதேச சபை பொறுப்பேற்றுத் திருத்த வேலை செய்ய வேண்டுமென அந்த வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் சார்பாக எஸ். மகாதேவனால் சமர்ப்பிக்கப்பட்டவிண்ணப்பத்தின் அடிப்படையில் வீதியைப் பிரதேச சபை பொறுப் பேற்றுக் கொண்டதாக பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் அறிவித்துள்ளார். (உ)

## கோழித் திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய்மத்தியில்கோழித் திருடர்களின்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்களால் விழிப்புக் குழு உறுப்பினர்களிடம்அடிக்கடிமுறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. (உ-79)

## இராசி பலன்

25/ 8/ 2001
(ஆவணி9, சனி)
சப்தமி மு. இ 7. 45 வரை
விசாகம் மு இ9. 50 வரை
ராகுகாலம் 9 05 - 10 35
நல்ல நேரம் 3. 05- 4 35
சித்தம்

**மேடம்**
பிரயாண பயம், காரிய தாமதம், வீண் மனஸ்தாபம் உடல் சோர்வு.

**இடபம்**
அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, மதிக்கப்படுதல், தனலாபம்.

**மிதுனம்**
ஆரோக்கிய நிலை, சந்தோசமான சம்பவம், காரியம்கை கூடும், சத்துரு ஜெயம்.

**கடகம்**
தாழ்வு நிலை, வியாபார மேன்மை, முயற்சி தாமதம் உடல் வியாதி

**சிங்கம்**
தன்னம்பிக்கைக் குறைவு, வீண் பதட்டம், காரியதாமதம், விரும்பாத உறவு

**கன்னி**
இனிய சம்பவம், வாக்கு மேன்மை, தனவரவு, கூட்டு முயற்சி

**துலாம்**
தனவிரயம், வாக்கு கலகம் மதிப்புக் குறைவு, பெண்கள் உதவி.

**விருச்சிகம்**
ஜனவசியம், நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, காரிய அனுகூலம்

**தனுசு**
காரிய அலைச்சல், சுபசெலவு, மனக்கிலேசம், தந்தைவழி உறவு

**மகரம்**
தனலாபம், சென்ற இடத்தில் சிறப்பு, மனமகிழ்வு, காரிய நன்மை.

**கும்பம்**
தொழில் வெற்றி, அதிகாரம், சுபநிகழ்வு, முயற்சி வெற்றி.

**மீனம்**
கட்டுப்படுதல், வயிற்றுக் கோளாறு, பயநத சுபாவம், காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்

### ஊழலின் உண்மை நிலை அம்பலம்

# ஜோர்ச் பெர்னாண்டஸ் மீண்டும் மந்திரிப் பதவி வகிப்பாரா?

(புதுடில்லி)

தேசிய ஜனநாயக முன்னணி அரசில் மீண்டும் ஜோர்ச் பெர்னாண்டஸ் மந்திரியாக்கப்பட இருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

தெஹல்கா நிறுவனம் ஆயுத பேர ஊழல் சம்பந்தமாக வெளியிட்ட பொய்யான தகவல்களால் பதவியை விலகிக் கொண்டவர் ஜோர்ச் பெர்னாண்டஸ்.

நேரடியாக தெஹல்கா ஜோர்ச் மீது குற்றஞ் சாட்டவில்லை யென்றும் இந்திய இராணுவ அதிகாரிகளை வளைக்க தெஹல்கா அழகிகளைப் பயன்படுத்தியதான கேவல நிலைக்குள்ளாகி நாட்டை உலகிற்கு மோசமாகக் காட்டியதென்றும் இப்பொழுது புலனாய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே, தான் ஒரு குற்றத்துக்கு உட்படுத்தப்படாத முன்னாள் பாதுகாப்பு மந்திரி ஜோர்ச் பெர்னாண்டஸ் மீண்டும் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார் என்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தெஹல்காவுக்கு எதிராக உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கோசமெழுப்பியுள்ளனர்.

தெஹல்கா அழகிகளைப் பயன் படுத்தியது குறித்து இந்திய நாட்டிற்கே தெஹல்கால் மாசுகற்பித்து விட்டது என்று பெர்னாண்டஸ் தெரிவித்தார். (து)

## மாதகலில் இருவர் கைது

[யாழ்ப்பாணம்]

மாதகல் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற இருவர் கடந்த வியாழனன்று படையினரால்கைது செய்யப்பட்டிருப்பதாக உறவினர்களால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரத்தினம் நடராசா (வயது 25) பாசையூரைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் ஜெனிங்ஸ்ரன் பெனால்ட் [வயது 26] ஆகிய இருவருமே படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
(உ-10)

## கருத்தரங்கு

(புலோலி)

க. பொ. த. (உயர் தர) பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் இரசாயனவியல் மாணவர்களின் நன்மை கருதி இரசாயனவியல் பாடத்திற்கான வினாக்களுக்கு விடை அளிக்கும் வழிகாட்டல் கருத்தரங்கொன்றை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் இன்று பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் காலை 9 00 மணிக்கு நடத்தப்படவுள்ளதாக வடமராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா அறிவித்துள்ளார். (உ- 52)

## தீவிர சோதனை

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட தலைமையகம் அமைந்துள்ள ஸ்ரான்லி வீதி சிறிதர் தியேட்டர் காரியாலயத்திற்கு முன்பாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் புதிய சோதனைச் சாவடிஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி ஊடாகச் செல்வோர் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். (உ-104)

## கலந்து உரையாடல்

[செம்பியன்பற்று]

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களிற்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பகுதி தலைவர் செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.
[உ-42]

## வடமராட்சிக் கடலில் கடற்படையினர் கெடுபிடி

### கையறு நிலையில் மீனவர்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் மீது கடற்படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பாதிக்கப்பட்டோர் புகார் தெரிவித்துள்ளனர்.

படையினரால்அனுமதிக்கப்பட்ட கடற்பிரதேசத்தில் அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் தொழிலுக்குச் செல்லும் போதே இவ்வாறு கெடுபிடிகளுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் குறித்த குறுகிய நேரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில், உடனடியாக அவர்களை வெளியேறுமாறு கட்டளையிடுவது மற்றும் மீன்பிடி உபகரணங்களைச் சேதப்படுத்துவது உட்பட பல்வேறு துன்பங்களுக்கும் தாம் ஆளாவதாக மீனவர்கள் தரப்பில் சுட்டிக் காட்டப்படுகிறது (உ-42,23


திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
**கலை நிலா அரங்கு**
(மாதாந்த அரங்க நிகழ்வு)

காலம் : 25. 08. 2001 சனிக்கிழமை (இன்று)
நேரம் : மாலை 6. 45 மணி
இடம் : மன்ற அரங்கு

நிகழ்ச்சிகள்
★ நடனம் ★ ஒயிலாட்டம்
★ கவிதாஞ்சலி

சிறப்பு நிகழ்ச்சி
**சத்திய சோதனை**
(இசை நாடகம்)
பிரவேசம் : இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி ;021- 2393
[C/2425]



**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை பழைய மாணவியும்
எமது நிர்வாக சபை உறுப்பினரும் வடக்கு கிழக்கு
முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளருமாகிய
செல்வி திலகவதி பெரியதம்பி
அவர்களினதும்
எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி கௌரி சந்திரலிங்கம்
அவர்களினதும்
அன்புத் தாயார்
திருமதி புவனேஸ்வரி பெரியதம்பி
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பருத்தித்துறை மெதடிஸ்த
பெண்கள் உயர்தர பாடசாலை
பழைய மாணவர் சங்கம்.

பருத்தித்துறை [2423]



**கண்ணீர் காணிக்கை**

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி கௌரி சந்திரலிங்கம்
அவர்களினதும்
எமது பழைய மாணவியும்
வடக்கு- கிழக்கு முன்னாள்
மாகாணக் கல்விப்பணிப்பாளருமான
செல்வி திலகவதி பெரியதம்பி
அவர்களினதும் அன்புத் தாயார்
திருமதி புவனேஸ்வரி பெரியதம்பி
அவர்களின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கை
யாக்கி அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்,
மாணவர், ஊழியர்

பருத்தித்துறை
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
பருத்தித்துறை.
(இ-2224)

### பெயரளவில் இயங்கும் மேலதிக

# மாகாணக் கல்விப் பணிமனையை

# மூடிவிடும்படி பலரும் அபிப்பிராயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மேலதிக கல்விப் பணிமனையினை மூடிவிடுமாறு பொது மக்கள் சார்பிலும் ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பிலும் வேண்டுகோள்கள் விடுவிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த விதமான செயற்பாடுகளும் அற்ற நிலையில் இப்பணிமனை இயங்கி வருவதாகவும், சாதாரணமாக ஆசிரியர் மாணவர்களின்பிரச்சினை கூட தீர்த்து வைக்கும் அதிகாரம் மேலதிக கல்விப் பணிப்பாளருக்கு இல்லை என்பதாலும் இவ்வாறான பணிமனை இருப்பதை விட இல்லாமல் இருப்பது மேல் எனவும் பொது மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேலும் முக்கிய விடயமாக மேலதிக கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி வசதி இல்லை யாழ். நகரில் ஒரு தேநீர் கடைக்குகூட தொலைபேசிவசதி உள்ள நிலையில் இப்பணிமனைக்கு இல்லாதது ஒரு வேதனை தரும் விடயமாக உள்ளதென பொது மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 20 மாதங்களுக்கு முன் மேலதிகமாகாண கல்விப் பணிப்பாளராக தணிகாசலம் பிள்ளை பதவி ஏற்றதன் பின்னர் இதனை ஓர் அதிகாரம் கொண்ட பணிமனையாக மாற்ற நடவடிக்கை எடுத்தும் அதுவும் இன்று வரையும் பலன் அளித்ததாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசாங்கமாகாண பொதுப் பரீட்சைகள் மாவட்ட கருத்தரங்குகள். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சை போன்ற விடயம் தொடர்பான அறிவுறுத்தல் கூட வலயங்கள் ஊடாகவும். பத்திரிகைகள் ஊடாகவும் மேலதிககல்விப்பணிமனைக்கு தெரியப்படுத்தப்படும் நிலை உள்ளது.

அத்துடன் கொடுப்பனவு அலுவலகம் கூட மேலதிக கல்விப் பணிமனையில் இல்லை. எனவே மாவட்ட செயற்பாடுகள் அனைத்திற்கும் முன்புஇருந்தது போன்று யாழ் வலயத்தினையே இணைப்பு அலுவலகமாக மாற்றி செயல்படுத்தினால் மேலதிக கல்விப் பணிமனைக்காக அரசு செலவிடும் சிறு தொகையினை யாவது மீதப் படுத்தி வலயங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முடியும் என பொது மக்கள் சார்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது (உ-10)

### அம்பாறை மத்திய

# பொலிஸ் முகாம் பொறுப்பு அதிகாரி இடமாற்றம்

(கொழும்பு)

அம்பாறை மத்திய முகம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி இன்ஸ்பெக்டர் ஹேரத் உடனடியாக அங்கிருந்து இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் திருப்தி அற்றதாக இருந்தமையாலும் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற போது அதிகாரிகள் பலர் அசிரத்தையாக நடந்து கொண்டதையடுத்தே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மாற்றம் செய்யப்பட்ட அதிகாரிக்கு பதிலாக புதிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இன்ஸ் பெக்டர் சேரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்களன்று நடைபெற்ற இத்தாக்குதலில் 25 பொலிஸார் பலியானதுடன் 18 பேர் காயமடைந்தமை தெரிந்ததே. (உ-4)

### இசை நிகழ்ச்சியில் குண்டு வெடிப்பு

# சந்தேகத்தின் பேரில் நால்வர் கைதாகினர்

[குருணாகல்]

குருணாகல் மக்கள் பூங்கா விளையாட்டுத்திடலில் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அதிகாலை இடம் பெற்ற குண்டுவீச்சு சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் நால்வர் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நான்கு மாதங்களின் பின்னர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி குண்டு வெடிப்பு சம்பவத்தில் 18-25 வயதிற்கு இடைப்பட்ட 16 பேர் கொல்லப்பட்டதுடன் 250 இற்கும் அதிகமானோர் காயமடைந்தமை தெரிந்ததே.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் இருவர் இராணுவத்தைவிட்டுத் தப்பியோடியவர்கள் என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. [உ]

# தனியார் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது

## தினேஷ் குணவர்த்தன

[கொழும்பு]

தனியார் பஸ் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் அதிகரிக்கப்படமாட்டாது என்று போக்குவரத்துஅமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போதையசூழ்நிலையில் பஸ் கட்டணங்களை அதிகரிப்பது ஏற்பாகாது என்றும் புதிய முறை மூலமாகபஸ்கட்டணங்களைஅதிகரிக்கும் திட்டம் ஒன்றைஅமுல்படுத்தவுள்ளதாகவும் அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் பஸ் கட்டணங்கள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம்அதிகரிக்கப்படவுள்ளதாக லங்கா தனியார் பஸ்சங்கத் தலைவர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

### வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

# இருபத்தையாயிரம் பேர் மனநோயால் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சுமார் 25ஆயிரம் சிறுவர்கள்,இளைஞர், யுவதிகள் மனவிரக்தி மற்றும் மனஅழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என இனவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாகாணங்களில் தொடர்ந்து இடம் பெற்று வரும் யுத்தம் காரணமாகவே இவர்கள்இந்நிலைக்குட் பட்டுள்ளனர்.

இவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்காக சகலமாவட்டங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் நாற்பதுஆலோசகர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இனவிவகார அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (செ)

### மோதல் சம்பவதில் பலியான

# இளைஞர்களின் பிரேத அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலங்களையும் நேரில் சென்று பார்வையிட்டயாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா. இம்மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் பிரேத அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை 72 மணித்தியாலயங்களுள் உரிமை கோரப்படாத பட்சத்தில் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டார். (உ-6)

# 2002 ஆண்டு ஜனவரி முதல் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக தகவல்துறை அமைச்சின் செயலாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அங்கீகாரம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# சிறைச்சாலைத் திணைக்களம் என்ற பெயரை மாற்ற திட்டம்

[கொழும்பு]

இலங்கைச் சிறைச்சாலைகள திணைக்களம் என்ற பெயரை மாற்றவுள்ளதாக நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த 200 வருடங்களாக வழக்கிலுள்ள மேற்படி பெயரை மக்களை நல்வழிப் படுத்தும் திணைக்களம்என்று பெயர் மாற்றம செய்யவுள்ளதாகவும்,

இனிவரும் காலங்களில் நாட்டில் மேலதிகமாகசிறைச்சாலைகள் ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை எனவும் அவர் குறிப்பிடுள்ளார்.

சிறைக் கைதி ஒருவர்சிறைச்சாலையில் இருந்து வெளியே வரும் பொழுது திருந்திய பூரணப்படுத்தபட்ட மனிதனாக வருவதுடன் சுயதொழிலை மேற்கொள்ளும் தகுதி வாய்ந்தவனாக மாற்றும் திட்டத்தை முன்வைக்கவுள்ளதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார். (உ)

# யுத்தத்தை நிறுத்தக் கோரி கையெழுத்து வேட்டை வடக்கிலும் இடம்பெறும்

(கொழும்பு)

அரசாங்கமும, புலிகள் இயக்கத்தினரும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி தமது குழந்தைகளின் உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்தும்படி கோரி ஒரு இலட்சம் பேரின் கையெழுத்துக்களைத் திரட்ட யுத்தத்தினால்பாதிக்கப்பட்ட பெண்கள அமைபபு திட்டமிட்டுள்ளது.

இக் கையெழுத்துக்களைத் திரட்டியபின்மேற்படி கோரிக்கையை அரசாங்கத்திடமும், விடுதலைப்புலிகள் இயக்கத் தினரிடமும கையளிக்க இருப்பதாக அமைப்பின் தலைவி திருமதி விசாகா தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம மடுபோன்றபிரதேசங்களிலும்இவ்வாறான கையெழுத்து திரட்டப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

# நாளை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சாந்திகம உளவளத்துணை நிலையத்தினால் வெளியிடப் படும் ‘முதுமை’ நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப3.00மணிக்கு யாழ் பல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது

கவிஞர் இ.முருகையனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் இ குமாரவடிவேல் வெளியீட்டுரையையும்,பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆய்வுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் காட்சிக்கோலபெட்டக நாடக நிகழ்வும் நடைபெறவுள்ளது. (செ-9)

# தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு விழாக்காலங்களில் தினமும் மாலை 5.00மணிதொடக்கம்6.00 மணி வரை ''விநாயக புராணம்'' பற்றி பிரமஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

# மின்சாரசபை ஊழியர் போல வீடுகளுக்குச் செல்வோர் மிரட்டிப் பணம் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

மின்சாரசபை ஊழியர்கள் போல் நடித்து பொதுமக்களிடம் பண மோசடி புரிய முற்படும் நபர்கள் குறித்து அவதானமாக நடந்து கொள்ளுமாறு இல. மின்சாரசபையின் யாழ். பிராந்தியவட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மின்சாரசபைக்கான நிலுவைகளை கட்டத் தவறியவர்களின் மின் இணைப்பை துண்டிக்கும் நடவடிக்கையில் மின்சாரசபையினர் ஈடுபடுவதைச் சாதகமாகப் பயன் படுத்தும் மோசடி நபர்கள் சிலர்:

வீடுகளுக்குச் சென்று மின் நிலுவைகளைத் தம்மிடம் செலுத்துமாறு அவ்வாறு செய்யாவிட்டால் இணைப்பைத்துண்டிக்கப் போவதாகவும் வெருட்டுதல், உருட்டுதல்களில் ஈடுபடுவதாகவும்,

அவ்வாறான நபர்களை இனம்கண்டு கொள்வதுடன், உண்மையான மின்சாரசபை ஊழியர்களை அவர்களது அடையாள அட்டைகளைப் பார்த்து உறுதிப் படுத்துமாறு மின்சாரசபை வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன. (உ)

### க.பொ.த. உ-த

# பரீட்சை வினாத்தாள்கள் நேற்று வந்தடைந்தன

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர் தரம் இரண்டாம் கட்டப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்றைய தினம் கப்பல்மூலம் வந்தடைந்துள்ளதாககல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டிருந்தகன் காரணமாக 4ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை முதற்கட்டமும்,27ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை அடுத்த கட்டமுமாக பரீட்சைநடைபெற்று வருவது தெரிந்ததே.

இதேவேளை, நடந்து முடிந்த முதற் தொகுதி பரீட்சை விடைத்தாள்கள் யாவும்கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# படையினர் இருவர் பலி

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த்தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மரமொன்றில் மறைத்துவைக்கப் பட்டிருந்த கிளைமோர் வெடித்ததிலேயே இவ் இரு படையினரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-4)

அம்பாறை மத்திய பொலிஸ் முகாம் தாக்குதல்:

# பெண்புலிகள் சரமாரியாக மோட்டார் தாக்குதல் நடத்தினர்

## களத்தில் நின்ற பொலிஸார் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

கடந்த திங்களன்று சென்றல் மத்திய பொலிஸ் முகாம் மீதுபுலிகள் தாக்குதலைமேற்கொண்டபோது அங்குபெண் புலி உறுப்பினர்களே களத்தில் அதிகமாக காணப்பட்டனர்.

இவர்களே சம்பவம் நடந்த தினத்தன்று அதிகாலை 2.00 மணியளவில் பொலிஸ் நிலையத்தின் பின்புறமாக உள்ள ஆற்றினூடாக பாரிய எடுப்பில் உட்புகுந்து எம்மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

இவ்வாறு மத்திய முகாம் பொலிஸ் மீது தாக்குதல் நடைபெற்றபோது காயங்களுடன் உயிர்தப்பியபொலிஸ் உத்தியோகத்தரானஎஸ்.சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது முகாமுக்குள் உட்புகுந்த புலிகளின் பெண்கள் அணி எம்மீது சரமாரியாக மோட்டார் தாக்குதலை தொடுத்தனர்.

நானும் என்னால் இயலுமானவரை தாக்குதலைமேற்கொண்ட வண்ணமே மறைந்திருந்தேன் அவர்கள் ஒவ்வொருவரும் கையடக்கமான சிவப்பு நிறமாக ஒளிரக் கூடியடோர்ச்லைற்வைத்திருந்தார்கள்.

அவர்கள்தாக்குதல் வெற்றிகரமாக முடிந்ததும் எமது இறந்த உறுப்பினர்களின் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக ஏதோ தமிழ்ப் பாடலைப்பாடிக் கொண்டு சென்றதை கண்டேன் எனவும் தெரிவித்தார். (உ-4)

## போதைப் பொருள் விற்பனை செய்து வந்த வெளிநாட்டுப் பெண்கைது

(கொழும்பு)

கல்கிசை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள விற்பனையில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐந்து மாதங்களுக்கு முன் இப் பெண் இலங்கை வந்ததாகவும் கல்கிசையில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கிருந்து ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகவும் இவரிடமிருந்து 24 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும்பொலிஸார்தெரிவித்துள்ளனர். (உ-5)

## மீண்டும் அதே இடத்தில் இயங்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி இந்துககல்லூரியை அதன் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கு படையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். இப்பாடசாலை தற்போது நெல்லியடிமத்தியமகாவித்தியாலயத்திலும் இணுவில் மத்தியகலலூரியிலும் இயங்கி வருகின்றது.

சாவகச்சேரி பகுதியில் இன்னமும் மககள மீளககுடியமர அனுமதியளிக்காத போதும் படையினர் இந்நடவடிக்கையை மேற்கொளவதாக தெரிவிக்கப்படுகிறது. [ந-4]

## பதுளை இளைஞர் இருவர் மர்மமான முறையில் மரணம்

(கொழும்பு)

பதுளையில் ஒரேநாளில் இரு வேறு இடங்களில் இரு இளைஞர்கள் மரணமடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரினதும் மரணத்திற்கு முன் ஒரே மாதிரியான அறிகுறிகள காணப்பட்டமை விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவ தினத்தன்றுமேற்படி இருவரும் இரவுச் சாப்பாட்டை முடித்தபின் ஒருவகையான நடுக்கம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் மரணமடைந்துள்ளனர். (உ)

## இசைத்தென்றல் நிகழ்வு இன்று

(ஈச்சமோட்டை)

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 5.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலில் 'இசைத்தென்றல்' நிகழ்வு நடைபெறவுள்ளது.

முழுமனித விடுதலை விழுமியஙகளுக்கு இசை வடிவம கொடுபபதாக இந் நிகழ்வு அமைவது குறிப்பிடத்தக்கது. (செ- 59)

## வேட்டையாடுவதை கைவிட மகியங்கனை வேடுவர்முடிவு

பசுமாடு வளர்க்கப் போகிறார்களாம்

(கண்டி)

இலங்கையின் ஆதிவாசிகள் எனக் கருதப்படும மஹியங்கனைப் பிரதேச வேடர்கள் காட்டில் மிருகங்களை வேட்டையாடுவதை கைவிட்டு பசுமாடு வளர்க்கும் தொழிலைக் கைக்கொளளப்போவதாக அறிவித்துள்ளனர்.

மேற்படி காட்டில்வாழும் 115 வேடுவக் குடும்பங்கள வன விலங்குகள் ஒழிந்து வருவதைக் கருத்திற் கொண்டு இம் முடிவை எடுத்திருப்பதாய் வேடுவத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வேடுவர்களின் முடிவு குறித்து திருப்தி வெளியிட்ட பொது அமைப்புக்கள் அவர்களுக்கு இலவசமாக பசுமாடுகளை வழங்கி அவற்றை வளர்ப்பதை ஊக்குவிக்க முன்வந்துள்ளன. (உ)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் யுவசக்தி முன் பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு சுதுமலை தெற்கு அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் க. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வீ. ஏ. ஜோண்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொளகிறார். (செ)

## பொலிஸார் மூவர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

கடந்த ஜூலை மாதம் 19ம் திகதி அரசாங்கத்திற்கு எதிராகநடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐககியதேசியக்கட்சி ஆதரவாளர் ஒருவர் பொலிஸாரால்சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 பொலிஸார் நேறறு முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தலா 50 ஆயிரம ரூபாகாசுப் பிணையிலும, கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப பொறுப்பதிகாரி அல்லது உதவிப் பொலிஸ்அத்தியட்சகரின் ஆள்பிணையிலும கொழும்பு மேல்நீதி மன்ற நீதிவான் உப லி அபயவர்த்தனா இவர்களை விடுதலை செய்தார். (ந-5)

## கல்விக் கல்லூரி மாணவர்களுக்கு சுகாதாரமற்ற குடிநீர்

(கொழும்பு)

காவத்தைருவன்புர கல்விக் கல்லூரியில் பால் நிறத்தில் களிமண் சுவையுடைய நீரை மாணவர்கள் குடிப்பதற்கு வழங்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த மாதம் இக்கல்லூரியில் விஷம் சலந்த நீர்அருந்தியதால் 57 மாணவர்கள்திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடததக்கது.

இருப்பினும் இதன் பிறகும் கல்விக் கல்லூரி நிர்வாகம் சுகாதாரமற்ற நீர்விநியோகத்தை மாணவர் மத்தியில் மேற்கொள்ள அனுமதித்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ]

## இலங்கை தமிழர்களுக்கு ஜே.வி.பி அறிவுரை

கலாசாரம் கைக் கொள்வது தொடர்பாக

(கொழும்பு)

இந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்கென்று இலங்கைத் தமிழ் கலாசாரம் உருவாக வேண்டும்.

அவ்வாறன்றி தென்னிந்தியக் கலாசாரத்தை அடியொற்றிவாழக்கூடாது இந்த அடிமைத்தனம் மாற்றப் பட வேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீர வன்ச கடந்ததிங்களன்று கொழும்புவிஹாரமா தேவி பூங்காவில் இடம் பெற்ற கூட்டத்தில் அறிவுரை கூறினார்.

இந்நாட்டில்வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை அடிமைகளாக மாற்றிய வர்கள் நாட்டைஇதுவரைஆட்சி செய்தவர்களேஎன்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ)

பழிதூற்றும் அரசியலை விடுத்து

## பண்பான ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும்

விஞ்ஞான முன்னேற்ற சங்கம் முடிவு

(கொழும்பு)

நாட்டை எந்தவொரு முன்னேற்ற இலக்கையும் நோக்கி வழிகாட்டிச் செல்லாத பழிதூற்றும் அரசியலைக் கைவிட்டு, பாராளுமன்ற ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்தவும், சட்டம் ஒழுங்கு, சமாதானத்தை நிலைநிறுத்தவும் தம்மால் முடிந்த விசுவாசமான முயற்சிகளை அரசியல்வாதிகள் மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு விஞ்ஞான முன்னேற்றச்சங்கம் ஆகஸ்ட் 15 ஆம் திகதி நடத்திய விசேட கூட்டத்தில் முடிவு செய்துள்ளது.

இதனை சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஜே. என். ஒலீப் பெர்னாண்டோ அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விஞ்ஞான சமூகத்தவராகிய நாம இன்றைய அரசியல், சமூக பொருளாதார பிரச்சினைகளை வேதனையுடன் அவதானித்து வருகின்றோம்.

வன்முறைகளும் குற்றச் செயல்களும் அதிகரித்து வருவதையும் ஒழுக்கச் சீர்கேடுகள் தீவிரமடைந்துவருவதையும், அரசியல் உறுதிப்பாடு மேலும் மேலும் குறைவடைந்து செல்வதையும் கடந்த சில தசாப்தங்களாக அவதானித்து வருகின்றோம்.

நாட்டின் பல பாகங்களிலும் அமைதியும், ஐக்கியமும் மோசமாக பாதிக்கப்பட்டு வருவதையும் காண்கின்றோம். அடிக்கடி குழம்பும் இச் சூழ்நிலையானது விஞ்ஞானிகளையும், தொழில்சார் நிபுணர்களையும் நாட்டைவிட்டு வெளியேறச்செய்கிறது வெளியேறாமல் இன்னும் இருப்பவர்கள் பெரும் சிரமங்களுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பழிதூற்றும் அரசியல் நடவடிக்கைகளை கைவிட்டு சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டும் முயற்சியில் கட்சிகள முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என சங்கம் கேட்டுள்ளது. (உ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

[தொடர்ச்சி]

ஆகஸ்ட் மாதம 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### நல்லூர்

| | |
|---|---|
| 187876 ஏ | 187877 ஏ |
| 187878 ஏ | 187891 ஏ |
| 187894 ஏ | 188051 ஏ |
| 188058 ஏ | 188061 ஏ |
| 188062 ஏ | 188063 ஏ |
| 188064 ஏ | 188065 ஏ |
| 188067 ஏ | 188068 ஏ |
| 188069 ஏ | 188073 ஏ |
| 188076 ஏ | 186077 ஏ |
| 188078 ஏ | 188081 ஏ |
| 188082 ஏ | 188083 ஏ |
| 188084 ஏ | 188085 ஏ |
| 188089 ஏ | 188090 ஏ |
| 188091 ஏ | 188094 ஏ |
| 188097 ஏ | 188098 ஏ |
| 196189 ஏ | 196189 பி |
| 196189 சி | 196189 டி |
| 196192 ஏ | 199602 ஏ |
| 199603 ஏ | 199613 ஏ |
| 199626 ஏ | 199657 ஏ |
| 199669 ஏ | 199674 ஏ |
| 199679 ஏ | 199686 ஏ |
| 199710 ஏ | 199741 ஏ |
| 199746 ஏ | 199750 ஏ |
| 199754 ஏ | 199764 ஏ |
| 199765 ஏ | 199766 ஏ |
| 199767 ஏ | 199768 ஏ |
| 199771 ஏ | 199778 ஏ |
| 199789 ஏ | 199790 ஏ |
| 199796 ஏ | 199797 ஏ |
| 200452 ஏ | 200453 ஏ |
| 200509 ஏ | 200510 ஏ |
| 200526 ஏ | 200531 ஏ |
| 200532 ஏ | 200533 ஏ |
| 200534 ஏ | 200565 ஏ |
| 200575 ஏ | 201188 ஏ |
| 201204 ஏ | 201204 பி |
| 201204 சி | 201204 டி |
| 201204 ஈ | 201221 ஏ |
| 201228 ஏ | 201237 ஏ |
| 201237 பி | 201249 ஏ |
| 201249 பி | 201249 சி |
| 201249 டி | 201249 ஈ |
| 201249எப் | 201251 ஏ |
| 201251 பி | 201261 ஏ |
| 201261 பி | 201263 ஏ |
| 201265 ஏ | 201267 ஏ |
| 201267 பி | 201267 சி |
| 201286 ஏ | 201290 ஏ |
| 201292 ஏ | 201297 ஏ |
| 201299 ஏ | 201299 பி |
| 201381 ஏ | 201439 ஏ |
| 204532 ஏ | 204539 ஏ |
| 204539 பி | 204539 சி |
| 204555 ஏ | 204574 ஏ |
| 204591 ஏ | 204603 ஏ |
| 204607 ஏ | 204720 ஏ |
| 204750 ஏ | 204751 ஏ |
| 204759 ஏ | 204759 பி |
| 204759 சி | 204759 டி |
| 205293 ஏ | 205293 பி |
| 205293 சி | 206396 ஏ |
| 206422 ஏ | 206422 பி |
| 205422 சி | 506505 ஏ |
| 206505 பி | 206529 ஏ |
| 206529 பி | 206529 சி |
| 206529 டி | 206529 ஈ |
| 206529எப் | 206646 ஏ |
| 206646 பி | 206667 ஏ |
| 206667 பி | 206668 ஏ |
| 208406 ஏ | 201838 ஏ |
| 201838 பி | 201838 சி |
| 201838 டி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 199791 ஏ | 200469 ஏ |
| 182723 ஏ | 182723 பி |
| 191890 ஏ | 199434 ஏ |
| 199528 ஏ | 199528 பி |
| 199579 ஏ | 201738 ஏ |
| 202054 ஏ | 202081 ஏ |
| 202135 ஏ | 202135 பி |
| 202135 சி | 202135 டி |
| 202235 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 199182 ஏ | 199182 பி |
| 199195 ஏ | 197878 ஏ |
| 197878 பி | 199574 ஏ |
| 199574 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 171184 ஏ | 187844 ஏ |
| 196253 ஏ | 196253 பி |
| 196253 சி | 196253 டி |
| 199775 ஏ | 189794 ஏ |
| 201176 ஏ | 201176 பி |
| 201176 சி | 201184 ஏ |
| 201184 பி | 201341 ஏ |
| 201341 பி | 201350 ஏ |
| 201351 ஏ | 201388 ஏ |
| 204518 ஏ | 204548 ஏ |
| 204551 ஏ | 204553 ஏ |
| 204553 பி | 204568 ஏ |
| 204568 பி | 204568 சி |
| 204568 டி | 204568 ஈ |
| 204568 எப் | 204569 ஏ |
| 204585 ஏ | 204585 பி |
| 204585 சி | 204610 ஏ |
| 204610 பி | 204743 ஏ |
| 204748 ஏ | 205767 ஏ |
| 205767 பி | 198056 ஏ |
| 201753 ஏ | 201773 ஏ |
| 202084 ஏ | 202093 ஏ |

### இன்று ஒரு தகவல்

# சுழல் காற்றின் மையத்தில் நின்று கொள்ளுங்கள்

சுழல் காற்று என்பது பல மைல்கள் வளையத்தில் சுழன்று அடிக்கிற காற்றாகும். சில சந்தர்ப்பங்களில் மணிக்கு நூறு மைல் வேகத்தில் கூட அந்தக் காற்று வீசும். அதன் விளைவாக பெரும் சேதங்களும் ஏற்படும். அதைத் தொடர்ந்து பெய்கின்ற மழை பயங்கர மின்னலுடனும், இடியுடனும் இருக்கும். சுழல் காற்று அல்லது சூறாவளிக் காற்றின் அனுபவம் பயங்கரமானது.

அதே சமயம் சுழன்று அடிக்கும் காற்றின் மையம் எதுவோ அதைச் சூறாவளியின் 'கண்' என்பார்கள். அந்த மையத்தில் நின்று கொண்டால் அந்த இடம் மிகவும் அமைதியாக இருக்கும். அந்த விஷயம் தான் இங்கு விளக்கப்படுகின்ற முக்கிய விஷயம். அவ்வப்போது உங்கள் சொந்த வாழ்க்கையில் இயற்கையாகவே சில புயல்காற்றுக்களை நீங்கள் அனுபவிக்கக் கூடும். அது தவிர்க்க முடியாதது, வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றாகக்கூட இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் சூறாவளிக் காற்றின்வேகத்தோடு இந்தப் புயல் காற்றும் வீசக்கூடும். அது உங்கள் உடல் ஆரோக்கியத்தையும் மன ஆரோக்கியத்தையும் உணர்ச்சிகளின் நலனையும்கூட அழித்துவிடக் கூடும்.

அந்தச் சூறாவளியின் மையத்தில் நீங்கள் நின்று கொண்டால் - அந்த மையத்தைக் கண்டுபிடித்து நீங்கள் நின்று கொண்டால் நீங்கள் எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாக மாட்டீர்கள். ஒவ்வொரு சொந்த ஆபத்திலும் ஓர் அமைதி மையம் இருக்கவே செய்கிறது. அந்த மையத்தைத் தேடிக்கண்டு பிடித்து விடலாம் துரதிர்ஷ்டம் ஏற்படுகின்றபோது எல்லாம் உங்களின் நம்பிக்கைக்குச்சமமான ஒருபாதுகாப்பை இயற்கை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

ஆகவே, உங்கள் சொந்த வாழ்க்கையில் சூறாவளி வீசுகின்றபோது பீதிக்கு இடம் கொடுக்காதீர்கள். புயலின் மையத்தில் உறுதியாக நில்லுங்கள்; புயல் வீசுகின்ற வலயத்துக்குள் அவசரப்பட்டு ஓடாதீர்கள்; எங்கே, இடியும், மழையும், மின்னலும் இருக்கிறதோ அங்கு சென்று அகப்பட்டுக் கொள்ளாதீர்கள். அது அழிவை ஏற்படுத்தும். தொல்லைகளின் விளிம்பில் ஆபத்தும், வேதனையும் இருக்கவே செய்கின்றன. ஆகவே மையத்தைத் தேடுங்கள். மையத்தில் தான் முழுமையான நிலைப்புத் தன்மையிருக்கிறது.

சுழலும் சக்கரத்தின்மையம் சுற்றாமல் இருப்பதைப்போல புயலின் மையத்துக்குச் செல்ல துணிச்சலும், நம்பிக்கையும் வேண்டும். அதைப் போலவே சொந்தப் பிரச்சினையின் மையத்தை உணரவும், நம்பிக்கையும் துணிச்சலும் தேவைப்படுகின்றன. தொல்லைகள் நிரம்பிய இந்த உலகத்தில் அமைதியும், சமாதானமும் காண துணிச்சலும், நம்பிக்கையும் தான் தேவையாக இருக்கின்றன.

டாக்டர் எம்.ஆர். காப்மேயர்

# இலகு கடனடிப்படையில் தையல் இயந்திரங்கள்

## 10 பேர் பயன்

[யாழ்ப்பாணம்]

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தினால் இலகு கடன் அடிப்படையில் பயனாளிகள் 10 பேருக்கு தையல் இயந்திரங்கள் கையளிப்பும் பாராட்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது

மேற்படி தையல் இயந்திரங்களை நெல்லியடி திரு. திருமதி பாஸ்கரன் குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது

நிகழ்வில் பிரதம விருந்தினராக கூ. அ. உ. ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (உ)

# தமிழ்க் கைதிகளை மனிதநேயத்துடன் நடத்துக வன்னிஎம்.பிவேண்டுகோள்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள அரசியல் தமிழ்க் கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவது குறித்து வன்னிமாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் சிறைச்சாலை ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்;

மேற்படி சிறையில் இருக்கும் அரசியல் தமிழ்க்கைதிகளுக்கெதிராக சிறைச்சாலை அதிகாரிகள் திட்டமிட்டு மேற்கொள்ளும் அநீதிகுறித்து நேற்றுமுன்தினம் சிறைச்சாலை ஆணையாளருக்கு எம். பி அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். [செ]

# படையினர் மீது புலிகள் தாக்குதல்

## சிப்பாய் பலி

(கொழும்பு)

ரோந்துப் பணியைமுடித்துவிட்டு முகாம் திரும்பியபடையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படைத்தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக விசேட தகவல் மையம் தெரிவித்துள்ளது.

வெலிஓயாவிலிருந்து வடக்கே 8 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பராக்கிரமபுர என்ற இடத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றதாகவும்,

படையினர் திருப்பித் தாக்கியதில் தீவிரவாதிகள் இழப்புகளுடன் பின் வாங்கிவிட்டதாகவும் தகவல் மையம்தெரிவித்துள்ளது;

இரவுக் கடமையைமுடித்துவிட்டு முகாம் திரும்பிய சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் பதவியாவில் இடம் பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (க)

## மத்திய மாகாணசபையில் இழுபறி

# அகப்பட்ட பொருள்களால் வீச்சு

# அமைச்சர் உட்பட மூவர் காயம்

(கொழும்பு)

மத்திய மாகாணசபைத் தலைவர் மகிந்த அபயக்கோனுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சிசமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாபபிரேரணை தொடர்பாக நேற்று முன்தினம் மத்திய மாகாண சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

சபை கூடிய போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்குஎடுக்குமாறு ஐக்கிய தேசியக்கட்சியினர் கோரினர்.

இதனை அடுத்து ஆளும் தரப்பினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்குமிடையில் சுடும் வாக்குவாதம் ஏற்பட்ட போது, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ரம்ளர்களை வீசி ஏறிந்தனர்.

இதனால் மாகாணசபை அமைச்சர் வி. ராதாகிருஷ்ணன்மற்றும் ஜே. வி. பி உறுப்பினர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவங்களால் சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டதையடுத்து சபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன. (உ-05)

# தற்காலிக கொட்டகை

[நல்லூர்]

திருநெல்வேலிப் பொதுச் சந்தையின் விஸ்தரிப்புவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் வியாபாரிகளின் வசதிக்காக, ஆடியபாதம் வீதியின் வடக்குப் பக்கமாகத் தற்காலிகமான கொட்டகைகளை நல்லூர்ப் பிரதேசசபைஅமைத்து வருகிறது. (உ-103)

# காணி கொள்வனவு

(நல்லூர்)

கொக்குவில் கிழக்கு கோணாவளை வீதியில், 24 பரப்புக் காணியைக்கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையினை நல்லூர்ப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. நல்லூர்ப் பிரதேச சபையின் பயன்பாட்டுக்காகவே இக்காணி கொள்வனவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்: (உ-103)

## தொலைக் கல்வி

# பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் தொலைக்கல்வி பயிற்சிநெறியில் பங்குபற்றுபவர்களுக்கான பகுதி i க்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணி முதல் நடைபெறும் எனவும். இதில் பகுதி i க்கான பரீட்சையில் தோற்றியவர்களும், தகுதி இருந்தும் பரீட்சையில் தோற்றாதவர்களும் தவறாது கலந்து கொள்ளலாம் எனவும் இரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்து தெரிவித்துள்ளார். [உ]

# சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று

[யாழ்ப்பாணம்]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ. கலைபண்பாட்டுப் பேரவையினரால் தினமும் மு. ப. 10 00 மணிக்கு நடத்தப்படும் தெய்வீகக் கலை நிகழச்சிகளில் இன்று 'ஔவைக்கருளிய ஆறுமுகன்' என்னும் தலைப்பில் சிவத்திரு வ. குமாரசாமி ஐயரின் சொற்பொழிவு இடம்பெறும்.

★ ★ ★

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றிவரும் கந்தர் அநுபூதி பற்றிய தொடரில் இன்று 'காளைக் குமரேசன்' என்ற தலைப்பில் உரையாற்றுவார்; (செ)

# நீர்கொழும்புப் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு கடற் பிரதேசத்தை அண்டிய களப்புப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலத்தை கடந்த செவ்வாயன்று பொலிஸார் மீட்டுள்ளனர்.

அலுத்வதைபள்ளியப் பகுதியில் இறால் பிடிக்கத்தோணியில் சென்று கொண்டிருந்த போது தோணியில் ஒரு பொருள் தட்டுப்பட்டதாகவும்,

அப்பொருளை கரைக்கு இழுத்து வந்து பார்த்த போதுசாக்கினுள் ஆணின் சடலம்கைகள் பின்னால்கட்டப்பட்ட நிலையில் இருந்ததாகவும் தெரிய வந்துள்ளது

முன்னக்கரை சாந்த நிக்கிலஸ் பகுதியைச் சேர்ந்த அதிகாரி பாண்டாரகே ஜோசப் (வயது 49) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக விசாரணைமூலம் தெரிய வந்துள்ளது

சகபாடிகளால் அவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (உ)

# சிறுவர் துஷ்பிரயோகம் இலங்கையில் அதிகரிப்பு

## ஐ. நா. சிறுவர் நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அதிகளவு சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெறுவதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இயங்கும் ஐக்கிய நாடுகள் மனித வளங்கள் அபிவிருத்தி நிலைய அதிகாரி நத்தப் றீரிஸ் ராய்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஆசிய நாடுகளில் பொதுவாக பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இலங்கையின் மேல மாகாண கடற்கரைப் பகுதியிலுள்ள உல்லாசப் பயண விடுதிகளில் 30ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்; (உ- 5)

# துவிச்சக்கர வண்டிகளை கண்ட இடத்தில்நிறுத்தாதீர் பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மத்திய பகுதியில் இயங்கும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு பகுதிகளில் மாத்திரமே துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துமாறு யாழ்போக்குவரத்துக்கண்காணிப்புப் பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது;

நகரின் குறிப்பிடப்பட்ட இடங்களை, யாழ் மருத்துவமனைக்கு முன்பு உள்ள பாதுகாப்பு நிலையத்திலும், கஸ்தூரியார் வீதியில் லிங்கம் ஐஸ்கிறீம் கடைக்கு முன்பாகவும் யாழ் மரக்கறி சந்தைப் பகுதியிலும் இயங்கும் யாழ். மாநகரசபையின் அனுமதி பெற்று நடாத்தப்படும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புப் பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி துவிச்சக்கர வண்டிகளை பாதுகாத்துக் கொள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வரும் இவ் வேளையில் அதனைத் தடுத்து நிறுத்துவதுடன், விபத்துக்களைத் தவிர்க்கும் வகையிலும் தமது கோரிக்கைக்குச் செவிசாய்த்து நடக்குமாறும பொதுமக்களைப பொலிஸார் கோரியுள்ளனர். (உ-10)

# இலவச யோகாசன பயிற்சி வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

யோகிராஜன் யோகேந்திர நிலையத்தினரால் ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித்தனியோகாசன வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படுகின்றன.

மருத்துவ ரீதியான யோகப் பயிற்சிகளை பெங்களூர் யோகப் பல்கலைக்கழகத்தில் பயின்று பயிற்சி பெற்ற சிவனேசராஜா யோகிராஜன் மேற்படி பயிற்சிகளை வழங்கி வருகிறார்.

32 மணித்தியாலங்களில் இப் பயிற்சி நெறியைப்பூர்த்தி செய்வதன் மூலம் ஒருவர் தானாகவே மேற்படி பயிற்சிகளைத் தொடர முடியும் எனவும் இப்பயிற்சிகளின் மூலம் பல உடல்சார் நோய்களை குணப்படுத்த முடியும் எனவும் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றுவரும் இந்நோய் நிவாரண ஆரோக்கியப் பயிற்சி யாழ். மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற சேவை நோக்கத்தினால் இலவசமாக நடத்தப்படுகிறது எனவும் யோகேந்திர நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

காலை மற்றும் மாலை ஆகிய நேரங்களில் மேற்கொள்ளப்படும் மேற்படி பயிற்சியை பெறவிரும்புவோர் இல 19 பண்டாரிக்குளம் ஒழுங்கை, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (செ-9)

# 200 தீவிரவாதிகள் பொலிஸாரால் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் துறைமுக நகரான கராச்சியில் 200க்கும் அதிகமான இஸ்லாமிய தீவிரவாதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்

யுத்தத்தின் பொருட்டு நிதி சேகரிப்பதை அரசு தடுத்துள்ளதற்கு இவர்கள் இணங்க மறுத்துள்ளனர். எனவேதான் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இத் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்ட அதே தினம் அதிகாலை முதல் 700ற்கும் மேற்பட்ட நிதி சேகரிக்கும் உண்டியல்கள் மற்றும் நவீன ரக ஆயுதங்கள் துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகத் தெரிய வருகிறது;

இதே வேளை சிமியா மாகாண அரசின் உத்தரவுகளுக்கு இவர்கள அடிபணியுமாறு அதற்கு 24மணிநேர அவகாசம் வழங்கப்பட்டு இவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க- 07)

# பாக். செயற்பாட்டில் காமென்வெல்த் திருப்தி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் 2002 ஒக்ரோபருக்குள் ஜனநாயகத்தை மீட்பதென்ற செயற்பாட்டில் காமென் வெல்த செயலர் திருப்திகொண்டுள்ளார்.

பாகிஸ்தான் சென்றிருக்கும் காமென்வெல்த்சபைதலைமை செயலர் டோன்மெக்லாஸ் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப்பையும் மற்றும் இதர அதிகாரிகளையும் சந்தித்து விட்டு பத்திரிகையாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்; பாகிஸ்தானில் ஜனநாயக முறையில் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு செல்லும் வாய்ப்பு அடுத்த வருடம் முடிவதற்குள் ஏற்பட்டு விடுமென்றும் அதற்கான ஆயத்தங்களை இராணுவ அரசு செய்துவருவதாகவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் ஊர்வலங்கள் மற்றும் எதிர்ப்புக்கூட்டங்கள் நடத்துவதற்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லையென்றும் அதுபற்றிய முடிவையும் பாகிஸ்தானின் அரசியல் திட்டத்தை மாற்றுவதற்கான திட்டமுடிவையும் இன்னும் எடுக்கவில்லையென்று காமென்வெல்த் செயலர் தெரிவித்தார் (து)

# ஸ்பெயின் நாட்டினுள் சட்டவிரோதிகள் நுழைவு நான்குபேரை காணவில்லை

(மாட்றிட்)

சட்டவிரோதமாக "ஸ்பெயின்" நாட்டிற்கு குடியேற முற்பட்டவர்களில் நான்கு பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

மீன் பிடிப்படகு ஒன்றின் மூலம் சட்டவிரோதமாக ஸ்பெயினிற்குள் நுழைய முற்பட்டவேளை ஸ்பெயினின் தென்கிழக்கு கடற்கரைப் பகுதியில வைத்து ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்;

கைது செய்யப்பட்ட ஏழு பேரின் விசாரணையில் மொத்தம் 11 பேர் படகில் வந்ததாகவும் சப்பல் கரையை அண்டும் முன்னர் நான்கு பேர் நீரில் குதித்து தப்பிச் செல்ல முற்பட்டதாகவும் பின்னர் அவர்களைக் காணவில்லை என்றும் தெரிவித்தனர்.

தொடர்ந்து பொலிஸார் விசேட படகுகளின்மூலம் கடலில் குதித்த நான்கு பேரையும் தேடிவலைவீசிவருவதாக தெரியவருகிறது.

இதேவேளை, கடந்த வாரம் 800 பேர் சட்டவிரோதமாக ஸ்பெயினிற்குள் நுழைய முற்பட்ட வேளை இரண்டு பேர் காணாமல் போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (7)

# திருச்சியில் தீ விபத்து 300 குடிசைகள் நாசம்

(திருச்சி)

திருச்சியில் 300 க்கும் மேற்பட்ட குடிசைகளும் வீடுகளும் தீக்கிரையாகின என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன் தினம் திருச்சிக்கருகே புல்லாங்குழல் என்ற இடத்தில் திடீரென நள்ளிரவில் தீபற்றிக் கொண்டதில் குடிசைகள் மற்றும் பெரிய வீடுகளும் தீக்கிரையாகின.

முழுமையான உயிர் சேதம் மற்றும் பொருட்சேதம் என்பன சரியாகத் தெரியவில்லையென்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்தத் தீ விபத்துக்கான காரணங்கள இன்னும் புலப்படவில்லையென்று காவல்துறையினர் தெரிவித்தனர். (து)

# சீனாவில் பஸ் விபத்து முப்பதுபேர் உயிரிழப்பு

(பீக்கிங்)

சீனாவின் ஸங்கி மாநிலத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பஸ்விபத்தொன்றில் முப்பதுபேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பத்தொன்பது பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

பாதையில் சென்றுகொண்டிருந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்ததனால் 30 மீற்றர் பள்ளத்தில் வீழ்ந்ததிலேயே இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றது (செ)

# வெனிசூ வெலாவில் டெங்கு காய்ச்சலால் 24 ஆயிரம் பேர் பாதிப்பு

[இலண்டன்]

வெனிசூவெலா நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் டெங்குக் காய்ச்சலினால்மூவர் பலியானதுடன் 24 ஆயிரம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்நாட்டு ஜனாதிபதிதொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ)

# மாணவர் இயக்கத்துக்கு தடை ஆர். எஸ். எஸ். எதிர்ப்பு

(புதுடில்லி)

சிமி எனப்படும் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் தடை செய்யப்படுவதை ஆர். எஸ். எஸ் இயக்கம் எதிர்ப்பதாகக் கூறியுள்ளது.

சிமி இயக்கம் ஒரு மாணவர் அமைப்புத்தான என்றும் அது ஒரு பயங்கரவாத இயக்கமில்லையென்றும், சிமி இயக்கம் நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுமாயின் அதனைச்சட்டத்தின்முன் நிறுத்தி விசாரிக்க வேண்டுமென்றும் ஆர். எஸ் எஸ் தொடர்பாளர் ஜி எம் வையா கூறினார்.

இதே வேளை, சிமிமீது தடை விதிக்க வேண்டுமென்று ஆர். எஸ் எஸ் இயக்கம் நெருக்கடி கொடுப்பதாக வந்த செய்திகளை மறுத்தார். (து)

## உலக தரிசனம்

## நாதஸ்வர மேதை இராசரத்தினத்தின் ஜனன விழா

(கும்பகோணம)

நாதஸ்வர மேதை திருவாவடுதுறை டி எம் இராசரத்தினம் பிள்ளையின் 103வது பிறந்த நாள் விழா நேற்று கும்பகோணம ஜெயரஞ்சனி சபாவில் நடைபெற்றது

இவ்விழாவில் இசைமேதை ஏ. கே. சி. நடராஜாவின் கிளாரிநட் இசை இடம்பெற்றது. (து)

## குண்டு வெடிப்பில் ஒருவர் பலி

(இலண்டன்)

கொலம்பியாவில் இடம் பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒருவர் பலியானதுடன் இருபத்தைந்து பேர் காயமடைந்துள்ளனர்;

இக் குண்டுவெடிப்பிற்கு ஈ. எல். என். அமைப்பு உரிமை கோரியுள்ளது. (செ)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 6 பொலிஸார் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது தீவிர வாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர். (செ)

## கடன் திருப்பி செலுத்தப்பட்டது

(கோன்)

சர்வதேச நிதி நிறுவனத்திற்குக் கட்ட வேண்டியிருந்த கடன் தொகையை செலுத்தி விட்டதாக தென் கொரியா அறிவித்துள்ளது.

பெற்ற கடனை முழுமையாகச் செலுத்திய தென் கொரியா பெருமிதப்படுகிறதென்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

# இமாலயப் பகுதிகளில் பூமியதிர்ச்சி ஏற்படலாம் புவியியலாளர் எச்சரிக்கை

(புதுடில்லி

இமாலயப் பகுதிகளில் பூமியதிர்ச்சி ஏற்படும் அபாயம் இருப்பதாக புவியியல் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்

இப்பூமியதிர்வில் இந்தியா பாகிஸ்தான் மற்றும், அயல் நாடுகள் பாதிக்கப்படலாம் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

'ஜெனரல் பான்ஸ்' என்னும் சஞ்சிகை ஒன்றில் வெளியாகியுள்ள விஞ்ஞானிகள் இருவரினது பேட்டியிலேயே இந்தத்தகவல் வெளியாகியுள்ளது [செ]

# தெஹல்கா இணையத்தளம் விலைமாதரின் முகவரா?

## விசாரணைகளை மேற்கொள்ளப் பணிப்பு

(புதுடில்லி)

இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தில் நிகழ்ந்த ஆயுதபேர ஊழல்களை அம்பலப்படுத்திய தெஹல்கா என்ற இணையத்தளம், விலைமாதர்களை பயன்படுத்தியது என்ற குற்றச்சாட்டு தொடர்பாக உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென இந்திய அரசு அறிவித்துள்ளது.

ஆயுத வியாபாரிகள்போல் நடித்த அந்தஇணையப்பத்திரிகையின் செய்தியாளர்கள் உயர் இராணுவ அதிகாரிகளுக்கு விலைமாதர்களை வழங்குவதை காட்டும் ஒளி நாடாக்கள் சிக்கியிருப்பதாக கூறப்படுகின்றது.

புலனாய்வு இதழியல்என்ற பெயரில் செய்திகளை சேகரிப்பதாககூறி சட்டத்தைமீறி குற்றம் புரிபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இந்திய நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரமோத் மகாஜன் கூறியுள்ளார்.

இதேவேளை ஊழல் பிரச்சினைகளை திசைதிருப்பவே அரசு இணையப்பத்திரிகை மீதுவீண்குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாக காங்கிரஸ்கட்சி கூறியுள்ளது. (உ-8)

# பலஸ்தீன அதிபர் வாஜ்பாய் சந்திப்பு

[புதுடில்லி]

மேற்காசியநெருக்கடிக்குஒரு முடிவை கொண்டுவர உதவி கோரி பலஸ்தீன அதிபர் ஜஸீர் அரபாத் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துள்ளார்.

புதுடில்லிக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட ஜஸீர் அரபாத்இந்தியப்பிரதமர் வாஜ்பாயுடன்இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினைகுறித்து உரையாடியுள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தியைச் சந்தித்தும் இதுதொடர்பாக தனது நிலைப்பாட்டை எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இஸ்ரேலும் தனது உயர் அதிகாரியை நாளை புதுடில்லிக்கு அனுப்ப இருப்பதாக இஸ்ரேல் அறிக்கையொன்று தெரிவிக்கிறது. [து]

# ஐ நா. சபைக்கு கடன் செலுத்த வேண்டிய நாடுகளில் அமெரிக்கா முன்னணி

(லண்டன்)

ஐ நா சபைக்கு கடன் செலுத்தவேண்டியநாடுகளின் பட்டியலில்அமெரிக்கா முதலிடத்திலுள்ளது.

அமெரிக்கா ஐ நா சபைக்கு 233 கோடி அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது

இக்கடன் தொகையில் 58 2 கோடி டொலர்களை இவ்வருட இறுதியில் செலுத்துவது என செனட்சபை உறுதியளித்திருந்த போதிலும் அதனைச் செலுத்தாது இழுத்தடித்து வருகின்றது.

ஐ. நா சபையால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குற்றவியல் நீதிமன்றத்திற்கு தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாகவே இப்பணத்தை செலுத்தாது காலந்தாழ்த்தி வருவதாகக்கூறப்படுகின்றது.

பல்வேறு நாடுகளிலும் அமெரிக்கப் படைகள் புரியும் குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள தொடர்பான விசாரணைகளை இந் நீதிமன்றில் அமெரிக்கா எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்பதனாலேயே இந்த நிதியைச் செலுத்தாது இருந்து வருகின்றது;

இதேவேளை, இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் ஐ. நா பொதுச்சபையில் புஷ் முதன் முதலாக உரையாற்ற முன்பு, இப் பணத்தை அமெரிக்கா செலுத்தும் என ஐ. நா செயலாளர் கொபி அனான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதே நேரம், அமெரிக்கா ஐ நா சபைக்கான தனது நிதிப்பங்களிப்பினை 100 கோடி டொலரில் இருந்து 88கோடிடொலராகக்குறைத்துள்ளது; (உ-3)

# மானுக்கு உதவியவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மான்குட்டி ஒன்றை உயிராபத்திலிருந்துபாதுகாத்து வந்த நபர் ஒருவரை வன விலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்துள்ள சம்பவம்புஸல்லாவை கட்டுகித்துல்ல தோட்டப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; காட்டுப் பகுதியில் வலையில் சிக்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த மான் குட்டியை காப்பாற்றி வீட்டில்வைத்து வளர்க்க முற்பட்டதனாலேயே இவர்கைது செய்யப்பட்டுள்ளார்; (செ)

உடைத்தம் வலி அறியார்
ஊக்கத்தின் ஊக்கி இடைக்
கண் முறிந்தார் பலர்.
-குறள்

## வலம்புரி

### சல்லாரிக் கூட்டம்!

தேசிய நல்லிணக்கஅரசு அமைப்பதற்கு ஐ. தே. கட்சி நிபந்தனைகளுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு முன் வந்துள்ளது. நாட்டின் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண்பதற்காக ஜனாதிபதியுடன் பேசுவதற்கும், ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் சம்மதித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசை பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து அமைக்குமாயின் ரணிலுக்குப் பக்கத்தில் நின்று படமெடுத்து தமிழர்களின் தன் மானத்தையே விபச்சாரமாக்கிய நம் தமிழ்த் தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது புரியாத புதிராகவேயுள்ளது.

தேசிய நல்லிணக்க அரசை அமைப்பதற்கு ஐந்துஆணைக்குழுக்களை அமைத்தல், பாராளுமன்றத்தைக் கூட்டுதல், சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்தல் ஆகியவற்றை முன் நிபந்தனைகளாக ஐ.தே. கட்சி குறிப்பிட்டுள்ளது. இந் நிபந்தனைகள் யாவும் தென்னிலங்கை மக்களின் சார்புடையதும், சிங்கள அரசியல் கட்சிகளின்பிரச்சினைகளுமாகும்.

ஆனால் ஐக்கியதேசியக் கட்சியால் முன் வைக்கப்பட்ட நிபந்தனைகளில் தமிழர் சார்புடையது எதுவுமில்லை. அப்படியானால் சிங்கள எதிர்க் கட்சிகளின் கோவிந்தா, கோபாலா பஜனைக்கு நமது தமிழ்க் கட்சிகள் சல்லாரி போட்டதாகவே முடிந்து விட்டது.

தேசிய நல்லிணக்க அரசை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முன் வைத்த நிபந்தனைகளில் விடுதலைப்புலிகள்மீதான தடையை நீக்கு அல்லது பாராளுமன்றத்தைக் கூட்டுவது போல், யுத்தநிறுத்தத்தை உடன் அமுல்படுத்து என்ற நிபந்தனையை முன் வைத்திருக்கலாம்

அத்தகையதொரு நிபந்தனை முன்வைக்கப்பட்டிருக்குமாயின், தமிழர்களின் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிநியாயமான போக்கைக் கடைப்பிடிக்கிறதெனக் கருத முடியும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லையே. அவ்வாறாயின் இரு பெரும் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தம்இனத்தைக் காக்க, தமிழர்களின் கையோங்குவதைத் தடுக்க ஒன்றுசேர்கிறார்கள் என்பதே உண்மையாகும். ஒட்டு மொத்தத்தில் படுதோல்வி ஐக்கிய தேசியக் கட்சியுடன் நின்று சல்லாரி போட்ட நம் தமிழ்க் கட்சிகளுக்கே யாகும்.

### திறனாய்வுக் களம்

# தற்காலக் கதையாக்கக் கலை,கைவினைகளில் விலகி நிற்கும் சுதந்திரராஜாவின் சிறுகதை

பேராசிரியர் சபா. ஜெயராசா
யாழ். பல்கலைக்கழகம்

சிறுகதை என்பது அதன் உருவ நிலையிலும், உள்ளடக்க முனைப்பிலும் 'உன்னதங்களை' எட்டியுள்ள நிலையில், பின்னைப் புதுமைகளாக எழுகின்ற சிறுகதையாக்கங்கள மிகுந்த பிரயத்தனங்களின்வழியாகவேகூர்ப்படைய வேண்டியுள்ளன.

#### திறனாய்வுப் பிரிவுகள்

கோட்பாட்டு நிலையில்சிறுகதையாக்கங்களைத் திறனாய்வு செய்தோர் தமிழ்மரபில் தொடக்க காலத்தில் பிரிந்து நின்றனர், உள்ளடக்கமாக எடுத்துரைக்க முயலும் 'செய்தி' முக்கியமானதன்று; கலையழகும், தளவழகும், எடுத்துரைக்கும் அழகியற் பெறுமானங்களுமே முக்கியமானதென்பது ஒருசாரால் வலியுறுத்தப்பட்டகருத்தாக அமைந்தது. இன்னொரு சாரார், சிறப்பாகச்சொல்லப்போனால் பாரம்பரியமார்க்சிய வழி வந்த திறனாய்வாளர்கள் வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களிலும்வாழ் நிலை அழுத்தங்களும், விசைகளும் ஊடுருவியுள்ளமையால் அவற்றின் சித்தரிப்பின் பின் உயிரோட்டத்தை வற்புறுத்தினர்.

இந் நிலையில் மேற் கூறிய இரண்டு அணிகளையும் இணைக்கும் மூன்றாவது விசை தோன்றியதிலும் வியப்பில்லை.

#### அந்நியமாய்விடும்

வரலாற்றுவளர்ச்சிமேலும் பல உந்தல்களுக்கு இந்நாட்டுச் சிறுகதைகளை இட்டுச் சென்றது. எமது நாட்டின் இன்றைய சமகால அனுபவங்கள் எந்த ஒரு கலைஞராலும் நிராகரிக்கப்பட முடியாது, ஆழத்தையும், வீச்சையும், அகன்ற பரிமாணங்களையும், பெரும் காவியங்களையோ, பிரமாண்டமான நாவல்களையோ எழுதுவதற்குரிய திரண்ட அனுபவங்களையும் கொடுத்துள்ளன. இவற்றைச் சிறிதளவேனும் தாங்காத ஆக்கங்கள் ஏதோ ஒரு வகையில் அந்நியமான ஆக்கங்களாகி விடும் என்பதையும் கலைத் திறனாய்விலேசுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இந் நூலாசிரியரின் ஆக்கங்களை மதிப்பிடும் பொழுது மேற் கூறிய திறனாய்வு வரலாற்றுப் பதிவுகளை ஆரம்ப நிலையிலே சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

#### கதையாக்கம்

பலவேறுபட்ட மக்களுடன் பழகியும் வாழ்ந்தும் வந்ததுமான பட்டறிவு, பல்வேறு புவியியற் பின் புலங்களில் இடைவினைகொண்டெழுந்த இவரது கதையாக்கங்களிலே பளிச்சிடுகொள்கின்றன. அனுபவங்களைக் கலையாக்கச் செயல் முறையிலிருந்து பிரித்தெடுக்க முடியாத தெப்பங்களாக இச்சிறு கதைகள் அமைந்துள்ளன.

இந்நிலையில் கதையாக்கக் கலை பற்றியும் கதையாக்கக் கைவினை (ARCFT) பற்றியும் சிறிது சிந்திக்க வேண்டியுள்ளது. நேர்விசை எதிர்விசை, நேர்ப்பாத்திரம், எதிர்ப்பாத்திரம், குவியும் சந்தர்ப்பம், விரியும் சந்தர்ப்பம், வெளித்துலங்கும் கோலம் உள்ளமைத்த குமைதல், போன்ற கதைக்கைவினை மூலகங்களை வைத்துபரும்படியாக்க உற்பத்தி முறைமைக்கு நிகரான வகையில்சிறுகதையாக்கும் தோற்றப்பாடு ஒருபுறம் வளர்ந்து வரும் இன்றைய கால கட்டத்தில் அத்தகைய விசைகளில் இருந்து விலகியிருக்கும் ஆக்கங்களை இவரது சிறுகதைகளிலே காண முடிகின்றது.

#### நுண்ணிய இயல்புகள்

ஒவ்வொருபெரும்பண்பாடுகளிலும் உட் பொதிந்துள்ள உட்கோல அமைப்புக்களை (INNER PATTERNS) தனது சிறுகதைகளின் வழியாகத் தரிசிக்க முயலும் இவ்வெழுத்தாக்கங்கள் பெரும்பாலும் கடந்து சென்ற ஒரு காலகட்டத்தின் கருத்தியலோடு இணைந்துள்ளன.

இவரது கதைகளைத் திறனாய்வு செய்யும் பொழுது ஐரோப்பியக் கலை வரலாற்றில் எழுந்த ஒரு சிறப்பார்ந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஜேர்மனியிலே தோன்றிய தேசிய மனோரதியக் கலைக் கோட்பாடு (ROMANTIC NATIONALISM) இவ்வகையிலே குறிப்பிடத்தக்கது; ஒவ்வொரு பண்பாடுகளிலும், துணைப் பண்பாடுகளிலும் காணப்படும் நுண்ணிய இயல்புகளை ஆராய்வதன் வாயிலாக அனைத்து மக்களிடத்தும் காணப்படும் பொதுமானிடத்தன்மைகளைக்காண முடியும் என்பது இக்கலைக் கோட்பாட்டின் சாராம்சமாகும். சிறுகதை என்ற சாதனத்தின் வழியாக அத்தகைய ஒரு தேடலை ஆசிரியர் மேற்கொள்ள முயல்வதும் இங்கே குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக வுள்ளது. □

# இனப் பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல; பேச்சுவார்த்தை மூலமே தீர்வு வேண்டும்

## அமைச்சர் அலவி மௌலானா

கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் ஒரு போதும் முடிவுகாண முடியாது. பேச்சுவார்த்தை மூலமே, அதுவும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் இனப்பிரச்சினை தீர்வில் ஐக்கிய தேசியக்கட்சி இன்னமும் விசுவாசமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

கைத்தொழில், மற்றும் முஸ்லிம் சமயவிவகார அமைச்சருமான எஸ். அலவிமௌலானா நேற்றிரவு வலம்புரிக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அமைச்சர் அலவிமௌலானா மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாட்டில் தற்போது அரசியல் நெருக்கடி தலைதூக்கியிருந்தாலும், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின்பக்கம் இன்னமும் 109 உறுப்பினர்களின் ஆதரவு உண்டு. இதில் எந்தவிதமான மாற்றத்திற்கும் இடமில்லை.

அமைச்சர்கள் எஸ். பி. திஸநாயக்கா, பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், மகிந்தவிஜயசேகரா, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் பிரச்சினை எல்லாம் தீர்த்து வைக்கப்பட்டு அவர்கள் அரசிற்கும், ஜனாதிபதிக்கும் ஆதரவு வழங்க முன் வந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா முன்னுக்குப்பின் முரணானவகையில் சந்தர்ப்பவாதம் பேசிவருகிறார். இந் நிலையில் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்து நேற்று கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார். அப்பேச்சுவார்த்தை எந்தஅளவிற்கு வெற்றியடையும் என்று தற்போதைக்கு சொல்ல முடியாது.

மக்கள் விடுதலைமுன்னணியின் (ஜே வி. பி.) அரசிடம் விடுத்திருக்கும் கோரிக்கை தொடர்பாக அரசு தற்போது பரிசீலித்துவருகிறது. அவர்களுடைய கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி இன்னும் இரண்டு தினங்களில் பதில் அனுப்பிவைப்பார்

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா இனப்பிரச்சினையையும் அரசியல் நெருக்கடியையும் தீர்த்து வைப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளார். அவரின் காலத்தில் இனப்பிரச்சினை தீர்த்துவைக்கப் படாவிட்டால் வேறு எந்த அரசாலும் தீர்த்துவைக்க முடியாது என்பதைத் தமிழ்க் கட்சிகள் உணர்ந்து செயற்படவேண்டும். ஐக்கிய தேசியக்கட்சியினர் பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் இழுத்தடிப்பதிலேயே ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதனை தமிழ் எம்.பிக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டுமென்று அமைச்சர்அலவி மௌலானா கூறினார். (வ

### தினசரி தியானம்

## ஏழைத் தெய்வம்

தரித்திர தேவோ பவ
துக்கி தேவோ பவ
மூர்க்க தேவோ பவ

-விவேகானந்த உபநிஷதம்

இறைவா, நீ எடுத்துள்ள எண்ணிறைந்த வடிவங்களுள் ஏழை வடிவத்தை நான் என்றென்றும் ஏத்துவேனாக.

இறைவனே உலகனைத்து மாயுள்ளார். அவருடைய வடிவங்களையெல்லாம் பாவித்துப் போற்றுவது இயலாத காரியம், ஏழை, எளியவன் வடிவத்தில் நம்மைத் தேடிவந்துள்ள அவரைத் திருப்திப் படுத்தினால் அது அவருக்குகந்த நல்ல ஆராதனையாகிறது.

ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

### நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம் என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை காலை 11மணிக்கு பாதுகாவலன் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பத்திரிகைத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு பயன் அளிக்கும் இந்நூலை பாதுகாவலன் ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை எழுதியுள்ளார். (வ)

### உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகத்தினரால் நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நாளை அராலி ஏ.எஸ். விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் சாந்தி நியூஸ்ரன் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (வ)

### தரமுயர்வு

[கோப்பாய்]

யாழ். மாநகரசபையின் இலங்கைதொழில்நுட்பவியல் சேவை வகுப்பு II ஏ உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச. கந்தராஜேஸ்வர சர்மா வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் தொழில்நுட்பசேவை வகுப்பு ஒன்றுக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளார். (உ-79)

### பதவியேற்பு

யாழ்ப்பாணம்))

கைதடி சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரியாக வைத்தியகலாநிதி திருமதி வி. கைலாசபதி பதவியேற்றுள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-9)

# தேசியநல்லிணக்க அரசுக்கு அமைச்சர் மகிந்த ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து தேசியநல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள முயற்சியை தான் வரவேற்பதாக அமைச்சர் விஜயசேகரா தெரிவித்துள்வார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் பேச்சுக்கள் நடத்தி தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைக்கும் முயற்சி வரவேற்கத்தக்கது; இதனை நான் முன்னரே தெரிவித்திருந்தேன். இதற்காக என் மீது சிலர் மனவருத்தம் கொண்டனர். ஆனால் அவர்கள் தற்போது உண்மையைப் புரிந்துள்ளனர்,

ஜனநாயக நாடொன்றில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது சகஜம் அந்தவகையிலேயே ஜனாதிபதியுடனும் கருத்துமுரண்பாடு ஏற்பட்டது, தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு தேசிய அரசு ஒன்றேதீர்வாகும் என்றும் அமைச்சர்மகிந்த விஜயசேகரா மேலும் தெரிவித்துள்ளார். (வ

## விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

புலவர் சிறுவர்பாடசாலையின் விளையாட்டு விழா நாளைபிற்பகல் 1மணிக்கு நவாலிபுலவர் குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது:

இளைப்பாறிய அதிபர் இ:வல்லிபுரம் பிரதமவிருந்தினராகவும் வலிதெற்கு பிரதேசசபைத்தலைவர் வி எ. ஜோன்சன் கௌரவ விருந்தினராகவும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக எஸ்·குணபாலசிங்கம் சோ.சுந்தரராஜன் அ·தனபாலரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

## வி. அ. அட்டை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்)

சிவசோதி ஜெயக்குமார் இல 90ஆஸ்பத்திரி வீதியாழ்ப்பாணம் என்பவருடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு தமது அலுவலகத்தில் உள்ளதாக புளொட் அமைப்பு அறிவித்துள்ளது,

இவ் அடையாள அட்டைக்கு உரியவர் ஆதாரங்களை காட்டி யாழ்ப்பாணத்திலுள்ள தமது தலைமைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அவ்வமைப்பு கேட்டுள்ளது. (ந-4

## அமைச்சர் அலவி பாங்கொங் பயணம்

[கொழும்பு]

இம்மாதம் 26ம்திகதி பாங்கொங்கில் நடை பெறவுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆசியப்பிராந்திய மாநாட்டுக்கு தொழில் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எஸ். அலவிமௌலானா தலைமையிலான குழுவொன்றுஇன்று பாங்கொங் பயணமாகிறது;

இம் மாநாட்டில் ஆசியப் பிராந்திய தொழிலாளர்களின் கல்வி தொழில், சுகாதாரம் உட்பட பலதுறைகள் தொடர்பாகஆராயப்படவுள்ளதாக அமைச்சர் அலவி மௌலானாதெரிவித்தார். (வ)

## கொக்குத்

காந்தரூபன் (சபாரத்தினம் காந்தரூபன் தண்ணீர்ஊற்று முள்ளியவளை)

வீரவேங்கை திவாகரன் (வேலாயுதம் திவாகரன் தண்ணீர்ஊற்று முள்ளியவளை)

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-4)

# மட்டக்களப்பில் பிள்ளைகளை புலிகளுடன் இணைக்கும் நிகழ்வு

(மட்டக்களப்பு)

பெற்றோர் தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொள்ளும் எழுச்சி நிகழ்வு, நேற்று முன்தினம் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது பிள்ளைகளை விடுதலைப் போருக்காக பெற்றோர் விடுதலைப் புலிகளோடு இணைத்துவரும் நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக இடம் பெறுகின்றன.

இவ் எழுச்சிநிகழ்வில்நேற்று முன்தினம் பண்டாரியவளை, முனைக்காடு மற்றும் சாந்தாமலை ஆகிய கிராமத்தைச் சேர்ந்த 61 பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுதலைப்போருக்கு உவந்தளிப்பதாக தெரிவித்து, மட்டு அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கரிகாலனிடம்பிள்ளைகளை ஒப்படைத்துள்ளனர்;

போருக்கு பிள்ளைகளை உவந்தளிக்கும் நிகழ்வில் பெற்றோர்கள் போராளிகளுக்கு ஆறுதல் கூறி பேசுகையில்;

''நீங்கள் யாருக்கும் தலைகுனியவேண்டாம் நாம் உங்களுக்கு பலமாக இருப்போம்; நாளை எங்கள் பிள்ளைகள் வெற்றியை உங்களுக்கு தேடித்தருவார்கள் போரில் வெல்லும்வரை பிள்ளைகளை அனுபபிவைப்போம் தலைவருக்கு இதனைச் சொல்லுங்கள்'' எனத் தெரிவித்தனர். [இ

# பிரதமரில் நம்பிக்கை 109எம்.பிகள் ஒப்பமிடுவர்

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மீது நம்பிக்கை தெரிவித்து 109 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா நேற்று அரச எம்.பிக்களுக்கு தேனீர் விருந்துபசாரம் ஒன்றை நடத்தியிருந்தார்.

இவ்விருந்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி எம்: பிக்கள் சகலரும் கலந்து கொண்டனர்.

இதில் சர்ச்சைக்குரிய அமைச்சர்களான பேராசிரியர் ஜி·எல்: பீரிஸ் மகிந்த விஜயசேகரா, எஸ். பி. திஸாநாயக்கா. ஜெயராஜ்பெர்ணான்டோ புள்ளே ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய பிரதமர் நாட்டில் தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலையை அகற்றவே எதிர்க்கட்சிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்துகிறது என்று தெரிவித்தார். (வ)

# பிரதேச ரீதியில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் நியமனமாவர்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள 7பிரதேச செயலர் பிரிவிலும் 83 பட்டதாரிப் பயிலுநர்ஆசிரியர்கள் நியமிக்கப் படவுள்ளனர்:

இதன் படி உடுவில், சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்கு தலா 10பேரும், சாவகச்சேரி, மருதங் கேணி பிரதேச செயலர் பிரிவிற்கு தலா 11பேரும் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் பிரிவிற்கு தலா 15பேரும் நியமிக்கப்படவுள்ளனர்:

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பளைபிரதேச செயலர் பிரிவிற்கு 11பேர் நியமிக்கப்படவுள்ளனர்:

இதற்கான விண்ணப்பங்களைவடக்குகிழக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. [ந-5]

## கோட்டை பஸ்ஸில் வெடிமருந்து

(கொழும்பு)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்து பஸ் ஒன்றிலிருந்து இருகிரனைட் மற்றும் வெடிமருந்துகளை கொழும்புக்கோட்டைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்:

குறிப்பிட்ட பஸ்ஸை விஜயரத்தின மாவத்தையில் உள்ள சோதனைச்சாவடியில் பொலிசார் சோதனையிட்ட போதே இவ் வெடிமருந்துகளைப் பொலிசார் கண்டு பிடித்தனர்.

தலைநகருக்குள் வெடிமருந்துகள் கொண்டுவரப்பட்டதை விசாரிக்கும் கோட்டைப் பொலிசார் சம்பவம் தொடர்பாக இரு சிங்கள இளைஞர்களைக் கைதுசெய்துள்ளனர். (இ)

## இராணுவ

படுவதை இந்திய அரசு ஒரு போதும் ஆதரித்ததில்லை.

சம்பந்தப்பட்ட இருதரப்பும் பேச்சு நடத்துவதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென்று தாம் கருதுவதாகவும் அவர் கூறினார்:

இதேவேளை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மீண்டும் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கும் தான் முயற்சிகளை எடுப்பதாகவும் தூதுவர் இச்சந்திப்பில் உறுதியளித்துள்ளார்: [இ]

## நாட்டின் நிலை

பெற்றது;

ஜே. வி. பியின் சார்பில் பிரசார செயலாளரும்எம். பியுமான விமல் வீரவன்ச பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்:

இதன் போது நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை அரசுக்குள்ள நெருக்கடிகள் மற்றும் ஜே. வி: பியினரின்நிலைப்பாடு குறித்து விரிவாக பேசப்பட்டதாக தெரியவருகிறது. [இ]

## கடவுச்சீட்டை

தாவது;

கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிப்பவர்கள் வழமையான கட்டணங்களையே செலுத்த வேண்டும் என்றும் மேலதிக கட்டணங்கள்எதையும்செலுத்தத் தேவையில்லை எனவும்

விண்ணப்பப் படிவங்கள் ஆங்கில மொழியில் எழுதவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்;

கடவுச்சீட்டுவிநியோகத்தில் தினமு 70லட்சரூபா அரசுக்கு கிடைப்பதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்[வ]

## சபாநாயகர்

அடுத்தமாதம் 7ந்திகதி பாராளுமன்றம் கூடும் போது அங்கு நிறைவேற்றப்படவுள்ள தீர்மானங்கள் குறித்தும் மற்றொரு தடவை மீண்டும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படாமையை உறுதிப்படுத்துவது பற்றியும் இச் சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்படும்;

சபா நாயகருடனான இச் சந்திப்பில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்வர்; [இ]

# நூல்கள் கொள்வனவு

[புலோலி]

பருத்தித்துறை பொது நூலகத்திற்கு கணனிதொடர்பான நூல்களும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான உசாத்துணை நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்கென51 ஆயிரம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. [உ-52]

## பொ. ஜ. ஐ. மு

வீரா, நிமால்சிறிபாலடி சில்வா, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ளார்;

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநயக்கா பேச்சுவார்த்தைக்கான இடம் குறித்து அறிவிக்காவிட்டாலும் இரு சாராரும் குறிப்பிடும் ஒரு பொதுவான இடத்தில் பேச்சு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

ஐக்கியதேசியக் கட்சிக்கும பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்குமிடையே இடம்பெறவுள்ள இப் பேச்சுவார்த்தை ஒரு குறிப்பிட்ட காலஎல்லைக்குள் முடிவடைய வேண்டும் என்றும் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

கருத்தொருமித்த அரசு அமைப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில்கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரியா, டிரோன் பெர்னாண்டோ கே என். சொக்ஸி, கட்சியின் தவிசாளர் சாரித்தரத்வத்தை ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுஜனஐக்கியமுன்னணி அரசுடனான பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி நடைபெறும் என்றும்.இதில்ஐக்கிய தேசியக்கட்சியின் பங்களிப்பு இருக்கும் என்றும் கருணசேனா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறு இருக்க ஜே· வி.பி;யுடனான பேச்சுவார்த்தைக்கு வேண்டியஒழுங்குகளை பிரதமர்ரட்ணசிறி விக்கிரம நரயக்கா செய்துள்ளதுடன் அவர்களுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிஉள்ளார்.

பிரதமரின் கடிதம் தொடர்பாக ஜே. விபியினர் இன்று கொழும்பில் கூடிஆராயவுள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பை ரத்துத் செய்தல் 5 ஆணைக் குழுக்கள் நியமித்தல் பாராளுமன்றத்தைக் கூட்டுதல்,அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் போன்ற விடயங்கள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று அக்கடிதத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான எதிர் கட்சிகளுடன் ஏக காலத்தில் பேச்சு நடத்த அரசுமுன் வந்திருப்பது அரசியலில் திடீர் திருப்பம் ஏற்பட வாய்ப்புண்டென ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். [வ]


உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைரநகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்



நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூலலிதாஸ் ஜுவல்லறி
174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-2195)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.